# தமிழ்ப் பல்கலைக்கழகம்

# தொலைநிலைக் கல்வி இயக்ககம்

# தஞ்சாவூர் -613 010

தொலைபேசிஎண்:04362 - 227152,434

முனைவர் நா. பாஸ்கரன்
இயக்குநர்

நாள்:24-1-2019

**சுற்றறிக்கை**

அன்புடையீர்,

பொருள்: தமிழ்ப் பல்கலைக்கழக தொலைநிலைக்கல்வி இயக்ககம் - 2019 சேர்க்கை குறித்த விவரங்கள் தெரிவித்தல் - தொடர்பாக.

-----------------

1. 2019ஆம் ஆண்டு முதல் தமிழ்ப் பல்கலைக்கழக தொலைநிலைக்கல்வியில் நடத்தப்படும் பொது மற்றும் இணைந்த கல்விப் பாடங்கள் அனைத்துக்கும் சேர்க்கைக்காலம் பல்கலைக்கழக நல்கைக்குழுவின் அறிவிப்பின்படி கீழ்க்கண்டவாறு அமைக்கப்படுகிறது.

   நாட்காட்டி ஆண்டு - 1.1.2019 முதல் 28.2.2019 வரை

   கல்வி ஆண்டு - 1.7.2019 முதல் 31.8.2019 வரை

2. 2019 நாட்காட்டியாண்டு சேர்க்கைக்கான விண்ணப்பங்கள் அனைத்தும் தொலைநிலைக்கல்வி இயக்கக மென்பொருளில் பதிவு செய்து, விண்ணப்பங்கள் இயக்ககத்தில் வந்து சேரக் கடைசி நாள் 28.2.2019 / 2019 கல்வியாண்டுக்கு 31.8.2019 ஆகும்.
3. மென்பொருளில் பதிவு செய்யப்படும் விண்ணப்பங்களில் கல்வித்தகுதிக்கான சான்றிதழ்கள் மற்றும் முழுக் கல்விக் கட்டணம் (மையப்பங்கு 20% நீங்கலாக) செலுத்தியமைக்கான இரசீது ஆகியவை இணைக்கவில்லையெனில் அவ்விண்ணப்பம் சேர்க்கைக்கு எடுத்துக்கொள்ளப்பட மாட்டா.
4. 2019ம் ஆண்டு முதல் முன்னாள் மாணவர்கள், கிராமப்புற மாணவர்கள், 60 வயதுக்கு மேற்பட்ட மூத்த குடிமகன்கள் ஆகியோருக்கு கல்விக்கட்டணத்தில் 10 விழுக்காடு சலுகை வழங்கப்படும்.

5. தமிழ்ப் பல்கலைக்கழகத் தொலைநிலைக்கல்வி இயக்ககத்தில் பயிலும் அறிமுகநிலைப்படிப்பு மாணவர்களுக்கு மட்டும் மாற்றுச் சான்றிதழ் வழங்கப்படும். மற்ற மாணவர்களுக்கு மாற்றுச் சான்றிதழ் வழங்கப்படமாட்டா என்ற விவரம் தெரிவிக்கப்படுகிறது.

இயக்குநர்

பெறுநர் :

அனைத்து தகவல் மையங்கள் /இணைந்த கல்வி தகவல் மைய ஒருங்கிணைப்பாளர்கள்
தொலைநிலைக்கல்வி இயக்ககம், தமிழ்ப் பல்கலைக்கழகம்

நகல் : 1. துணைவேந்தர் செயலகம் 2. தொலைநிலைக்கல்வி தேர்வுகள் பிரிவு